(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 சனவரி 27

அவர்கள் சொன்னதுமாதிரி முறைப்படி எழுதிக்கொடுத்து கேட்டால் தான் முழு விவரத்தோடு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கமுடியும். அமைச்சர் அவர்கள் எந்தத் தேதி என்று குறிப்பிட்டார்கள். அதைக்கூட கூறியிருக்க வேண்டியது அவசியம் இல்லை. இருந்தாலும் அவர்கள் பெருந்தன்மையின் அடிப்படையில் இந்த அவையின் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அதை அளித்திருக்கிறார்கள். இந்த விவாதத்திலே கலந்து கொள்கிறபோது பிரச்சனைகளை எழுப்பலாம். தனியாகக் கேட்கவேண்டும் என்றால் சட்டப் பேரவையின் விதிமுறைகளின்படிதான் கேட்கவேண்டும். ஒரு அடிப்படையும் இல்லாமல் திடீர் என்று எழுந்து கேட்பது என்பது சரிப்பட்டு வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சுருக்கமாகச் சொன்னது உங்களுக்கு விளங்கவில்லை. அதையே நாவலர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: ஜீரோ அவர் என்பது நாவலர் அவர்களுக்கு புதுமையானது அல்ல.

5. தகவல் கோரல்

(அ) பேருந்து விபத்து

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து சிலோனுக்கு 36 பேர்கள் சுற்றுலா சென்று இருக்கிறார்கள். அவர்கள் பேருந்து மூலம் செல்கிற நேரத்தில் 16 பேருக்கு விபத்து ஏற்பட்டு அதில் 3 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை எல்லாம் எழுத்து மூலமாக கொடுத்து விளக்கங்களை கேட்டால் விளக்கம் தர முடியும். ஒவ்வொரு ஊரிலிருந்தும் சுற்றுலா போகிறார்கள். ஆங்காங்கே விபத்துகள் தினசரி நடந்துகொண்டிருக்கின்றன. உங்கள் தொகுதியிலிருந்து போனவர்களாக இருந்தால் அதற்காக தனி முக்கியத்துவம் அளிக்கமுடியாது. எழுத்து மூலம் கொடுங்கள்.

(ஆ) ஆந்திராவிலிந்து அரிசி கொண்டு வருதல்.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கும்போது நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்திராவிலிருந்து 40 லட்சம் டன் அரிசி கொண்டு வருவது பற்றி வெளியில் பேசியிருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்பு மூலமாகவோ உரிமைப் பிரச்சனை மூலமாகவோ கேளுங்கள். சட்டப்பேரவை விதிமுறைகளை வேண்டுமானால், ஒரு காப்பி கொடுக்கச் சொல்கிறேன்.

(இ) தஞ்சையில் விவசாயிகள் பாதிப்பு.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி திடீர் திடீரென்று எழுந்து கேட்டால் தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் அனுதாபம்தான் தெரிவிக்க முடியும், நான் அவ்வளவுதான் செய்ய முடியும், வேறு ஒன்றும் செய்யமுடியாது. வரைமுறைகளின்படி அவைகளைக் கொண்டுவாருங்கள். ஒரு மணி நேர விவாதம் வேண்டுமானால் கேளுங்கள். அதை அனுமதிப்பதற்கு நான் முயற்சி எடுக்கிறேன். அந்த உதவியைத் தான் நான் செய்யமுடியும். நாளையிலிருந்து எல்லாம் எடுத்துக் கொள்ளலாம்.

(ஈ) வி. ஐ. பி-க்களுக்காக ஒதுக்கப்பெற்ற மின் தூக்கியில் சட்டமன்ற உறுப்பினர்களை அனுமதிப்பது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டுள்ள விஷயமாக இருப்பதால் நான் தெரிவிக்கிறேன். 24 ஆம் தேதி அன்று மாலை 4-30 மணிக்கு புதிய பில்டிங்கிற்கு நான் சென்று கொண்டிருந்தேன். அங்கே இதுவரைக்கும் எம். எல். ஏ. க்கள் தாராளமாக லிப்டில் போய்க்கொண்டு இருந்தோம். யாரும் தடுத்து நிறுத்துவது இல்லை. ஆனால் அன்றைக்கு நான் போனபோது அங்கே இருந்த, காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு போலீஸ்காரர் 'மேடம், மேடம் போகாதீர்கள், என்று சொன்னார். ஐய்யா, நான் எம் எல். ஏ. அய்யா என்று நான் சொன்னேன். நான் அதிகாரிகளிடத்திலே சில வேலைகளுக்காகச் செல்கிறேன் என்று சொன்னவுடன் உங்கள் பாஸைக் காட்டுங்கள் என்று சொன்னார். உடனே நான் பாஸை எடுத்துக் கொடுத்தேன். அவர் கேவலமான முறையிலே, வேறு எதுவும் வார்த்தை பேசவில்லை, இதில் வி. ஐ. பி. தான் போகலாம் என்று சொன்னார். இந்த பாஸை கையில் வைத்துள்ள எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் வி.ஐ.பி.-க்களா இல்லையா என்று கேட்க விரும்பு கிறேன்.